R 4909 (page 408)

# பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது

# THE WORK OF GRACE IN THE HEART

"கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது."
- (2 கொரிந்தியர் 5:14)

R4910 : page 408

கிறிஸ்தவ குணலட்சணத்தில் சகிப்புத் தன்மையினுடைய முக்கியத் துவமானது, அப்போஸ்தலனாகிய பவுலினால் இவ்வார்த்தைப் பயன்படுத்தப்படுவதன் வாயிலாக முழுமையாய் வெளிக்கொணரப்பட்டுள்ளது; ஏனெனில் ஒரு முறைக்கும் அதிகமாக, அநேகம் முறைகள் அவர், நாம் ஓடிட வேண்டியதான குணலட்சணத்தினுடைய இலக்காகிய அன்பிற்கு மேலாகவும் ஸ்ரீ பரிசைப் பெற்றுத்தரும் இந்த இலக்கிற்கு மேலாகவும், உயர்வாகவும் பொறுமையை வைக்கின்றார் என்று பார்க்கின்றோம். உதாரணத்திற்கு அவர் தீத்துவுக்கு முதிர்ச்சியடையும் கிறிஸ்தவனுக்கான குணநலன்களை வரிசைப்படுத்தி எழுதுகையில், அவர் பின்வரும் வரிசை முறையில் கொடுத்துள்ளார்: 'முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும், அன்பிலும், பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு" (தீத்து 2:2). நாம் மற்ற அனைத்துப் பண்புகளையும் பெற்றிருப்பினும், நாம் உண்மையுள்ளவர்களில் அங்கத்தினர்களெனக் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக, பொறுமையாய் இருத்தல், சந்தோஷமாய்ச் சகித்தல் எனும் இந்த இறுதி பரீட்சையானது கடக்கப்பட வேண்டும்.

தீமோத்தேயுவுக்குத் தன்னைக்குறித்து எழுதும்போதும், மீண்டுமாக அப்போஸ்தலன் 'நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும், . . . நன்றாய் அறிந்திருக்கிறாய்" (2 தீமோத்தேயு 3:10) என்று கூறி பொறுமையாய்ச் சகித்தல் எனும் இப்பண்பினை அவர் அன்பிற்கு மேலாக வைக்கின்றார் என்று பார்க்கின்றோம்.

## உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்

ஒருவேளை 'அன்பே நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாகவும்," நம்முடைய பரம அழைப்பிற்கான பந்தயப்பொருளுக்குரிய இலக்காகவும் இருக்குமானால், பின்னர் எப்படிப் பொறுமையானது, அன்பைக்காட்டிலும் மேலானதாக முடியும்? என்று ஒருவர் கேட்கலாம். பதில் என்னவெனில் . . . பொறுமையோடு சகித்தல் என்பது நம்முடைய ஓட்டத்தினுடைய இறுதிப்பகுதியில் மாத்திரம் வருகிற ஒன்றல்ல மாறாக பந்தய சாலையின் வழி முழுவதிலும் அவசியமானதொன்றாகும். கிறிஸ்தவ ஜீவியப்பாதையினுடைய ஆரம்பக்கட்ட சோதனைகளிலிருந்தே நமக்கு இந்தச் சந்தோஷத்தோடே சகிக்கும் தன்மை அவசியமாயிருக்கின்றது; மேலும் நம்முடைய ஓட்டத்தில் நாம் இலக்கை நோக்கி விரைவாய் முன்னேறிக்கொண்டிருக்கையில், பிரயாணத்தினுடைய ஒவ்வொரு அடியெடுத்தல்களிலும் சந்தோஷத்தோடே சகிக்கும் ஆவியானது பலம்மேல் பலமடைந்துகொண்டிருக்க வேண்டும். சிலர் சில நாட்களுக்கு அல்லது சில மாதங்களுக்கு அல்லது சில வருடங்களுக்கு மாத்திரம் உண்மையாய் இருப்பதினால், கிறிஸ்துவினுடைய மாபெரும் இராஜ்யத்தின் ஆசீர்வாதத்திற்கு அபாத்திரராகிவிடுவர்.

விதைப்பவன் உவமையில் இந்த உண்மைக்கான உதாரணத்தினை நமது கர்த்தர்

கொடுத்தார்; அவர் கூறினதாவது . . . சில விதைகள் கற்பாறையான நிலத்தில் விழுந்து, முளைத்தன் அது வளர்ந்தது; ஆனால் இறுதியில் உபத்திரவமாகிய எரியும் சூடு வந்தபோது, மென்மையான செடிகள் காய்ந்துபோயின. இராஜ்ய வகுப்பாரினுடைய அங்கத்தினர்களைத் தெரிந்துகொள்கையில், கர்த்தர் சகிப்பதற்குப் பொறுமையாய் இருக்கக்கூடிய ஆழமான நிலத்தை, ஆழமான குணலட்சணத்தை, ஆழமான இருதயத்தைத் தேடுகின்றார். எந்தவொரு தளத்திலுமுள்ள ஜீவிகளுக்கும், பொறுமையானது அவசியமான குணநலமாய் இருக்கின்றது; ஆனால் கிறிஸ்தவன் விஷயத்தில், அது ஓட்டத்தினுடைய துவக்கம் முதற்கொண்டு வளர்க்கப்படுவது விசேஷமாய் முக்கியமானதாய்க் காணப்படுகின்றது. அது நம்மோடு முதல் கால்-மைல் இலக்கில் காணப்பட வேண்டும் மற்றும் இரண்டாம் கால்-மைல் இலக்கிலும் மற்றும் மூன்றாம் கால்-மைல் இலக்கிலும் மற்றும் பரிசைப் பெற்றுத்தரும் இலக்காகிய - பூரண அன்பாகிய - நான்காம் கால்-மைல் இலக்கிலும் நம்மோடு காணப்பட வேண்டும்.

ஓட்டத்தினுடைய இந்த இலக்கை நாம் அடைகையில் - அதாவது நாம் நம்முடைய நண்பர்களை மாத்திரமல்லாமல், நம் சத்துருக்களைக்கூட அன்புகூரும் நிலையை அடைகையில் . . . அப்போதும்கூட நம் மீது வரத் தகுதியானது என்று கர்த்தர் கண்டு, அனுமதிக்கும் பரீட்சைகளை உண்மையோடும், சந்தோஷத்தோடும், பொறுமையோடும் சகித்து இலக்கில் காணப்பட வேண்டும் என்றும் நம்மில் எதிர்ப்பார்க்கப்படுகின்றதாய் இருக்கின்றது. தேவன் தம் ஜனங்களைச் சோதனைக்கு - நீண்டகால சோதனைக்கு - சிலசமயம் மாதக்கணக்கான மற்றும்

**R4910 : page 409**

வருடக்கணக்கான சோதனைகளுக்குக் கீழ்ப்படுத்துகின்றார்; 'உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3).

ஆகையால்தான் 'சகலத்தையும் செய்து முடித்து நில்லுங்கள்" - சகியுங்கள் என்றும், 'இலக்கை" அடைந்த பின்னர் . . . 'பொறுமையானது பூரண கிரியைச் செய்யக்கடவது" அல்லது 'பொறுமை அதன் கிரியையைப் பூரணப்படுத்தப்படக்கடவது" என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு அறிவுறுத்துகின்றார். பரிசை அருளுவதற்கு ஓட்டத்தில் எதிர்ப்பார்க்கப்படுகின்றதான குணலட்சணத்தை, அதாவது அன்பு எனும் தகுதிகளைத் தாங்கள் பெற்றிருக்கின்றீர்கள் என்பதை மாத்திரமல்லாமல், எதிர்ப்புகளை உங்களால் சந்தோஷமாய்ச் சகிக்க முடிகிற அளவுக்குத் தாங்கள் அன்பை ஶி ஆழமாய் வேரூன்றப்பட்ட, அசைவுறாத குணநல அம்சமாய்ப் பெற்றிருக்கின்றீர்கள் என்பதையும்கூட உங்களது 'பொறுமையோடு சகித்திடும்" தன்மையானது நிரூபித்திடுவதாக.'நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபிரெயர் 10:36) என்று பரிசுத்த பவுல் அடிகளார் நம்மிடம் கூறுகின்றார்.

-------------------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com